**டிசம்பர் – 04**

# TNPSC துளிகள்

- சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் "Viksit Bharat: Security Dimensions" என்ற கருத்துருவில் 60வது அகில இந்திய காவல்துறை இயக்குநர்கள் (DGP) மற்றும் காவல்துறை ஆய்வாளர்கள் (IGP) மாநாடு நடைபெற்றது.
- 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் முன் எப்போதும் இல்லாத அளவில் 357 மில்லியன் டன் உணவு தானிய உற்பத்தி பதிவாகியுள்ளது என்பதோடு, இது கடந்தப் பத்தாண்டுகளில் பதிவான 100 மில்லியன் டன் அதிகரிப்பைக் குறிக்கிறது.
- மாநிலத்தில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக மேகாலயா தனது முதல் வடகிழக்கு இந்திய இயற்கை வேளாண்மை வாரத்தை அனுசரித்தது.
  - இயற்கை வேளாண்மையில் இளையோர்களின் ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்காக 4வது IFOAM (சர்வதேச இயற்கை வேளாண் இயக்கங்களின் கூட்டமைப்பு) உலக இயற்கை வேளாண்மை இளையோர் உச்சி மாநாட்டையும் அம்மாநில அரசு நடத்தியது.
- எல்லைப் பாதுகாப்புப் படையை (BSF) கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 01 ஆம் தேதியன்று BSF எழுச்சி தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - இந்தப் படையானது, இந்தியாவின் எல்லைகளைப் பாதுகாப்பதற்கும் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழகத் தயாரிப்புகளுக்கான புதிய புவிசார் குறியீடுகள்




- உறையூர் பருத்தி சேலை, கவுந்தப்பாடி நாட்டுச் சக்கரை (வெல்லம் தூள்), நாமக்கல் மட்பாண்டம் /மக்கள் உபயோகிக்கும் பாத்திரங்கள் (சோப்புக்கல் /நுரைக்கல் சமையல் பாத்திரங்கள்), பாரம்பரிய தூயமல்லி அரிசி வகை மற்றும் அம்பாசமுத்திரம் சொப்பு சாமன் (மர பொம்மைகள்) ஆகிய தமிழ்நாட்டின் ஐந்து தயாரிப்புகள் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளன.
- இதன் மூலம், தமிழகத்தில் தற்போது 74 புவி சார் குறியீடு கொண்ட பொருட்கள் உள்ளன.


- ஈரோடு மாவட்டத்தில் உள்ள கவுந்தப்பாடி, தமிழ்நாட்டின் முக்கிய வெல்லத் தூள் உற்பத்திப் பகுதியாக உள்ளது.
- தூயமல்லி அரிசி வகை, 135 முதல் 140 நாட்களுக்கு மேல் வளர்க்கப்படும் ஒரு பாரம்பரிய சம்பா-பருவ நெல் வகையாகும்.

## கரிக்கியூர் பாறை ஓவியங்களின் ஆவணமாக்கம்



- தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறையானது கீழ் கோத்தகிரியில் உள்ள கரிக்கியூர் பாறை ஓவியங்கள் தளம் குறித்த தகவல்களை ஆவணப்படுத்தும் புத்தகத்தை விரைவில் வெளியிட உள்ளது.
- உதகமண்டலத்தில் "The Nilgiris Archaeology" என்ற தலைப்பிலான மற்றொரு புத்தக வெளியீட்டின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- இது யாக்கை பாரம்பரிய அறக்கட்டளையால் தொகுக்கப் பட்டது
- இந்தப் புதிய புத்தகம் ஆனது தமிழ்நாட்டில் உள்ள பாறை ஓவியங்கள் குறித்த நான்கு ஆண்டு ஆவணப்படுத்தல் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் திட்டம் இந்த மாநிலம் முழுவதும் உள்ள பாறை ஓவியம், புதைவிடங்கள், கற் திட்டைகள், நடுகற்கள், சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுகளைப் பதிவு செய்கிறது.

## TN 100 Chip Varsity திட்டம்




- தமிழ்நாடு அரசு மற்றும் iVP செமி (ஒருங்கிணைந்த பல செயல்பாடுகளை ஒரே

நேரத்தில் மேற்கொள்ளும் குறைகடத்தி) ஆகியவை 'TN 100 Chip Varsity' திட்டத்தைத் தொடங்கியுள்ளன.

- இந்தத் திட்டமானது, இந்த மாநிலம் முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரிகளுக்குள் சில்லுகள் வடிவமைப்பு ஆய்வகங்களின் வலையமைப்பை அமைக்கும்.
- இது ஒவ்வோர் ஆண்டும் 100 புதிய சில்லு வடிவமைப்புகளை உருவாக்கி சுமார் 5,000 மாணவர்களுக்கு குறைக்கடத்தி வடிவமைப்பில் பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரிகள் தொழில்துறை தர செயற்கருவிகள், பயிற்சி சில்லுகள் மற்றும் நிபுணர் வழிகாட்டுதலைப் பெறும்.

# தேசியச் செய்திகள்


## தேசிய நகர்ப்புற மாநாடு 2025




- 2025 ஆம் ஆண்டு தேசிய நகர்ப்புற மாநாடு ஆனது, வளர்ச்சியடைந்த இந்தியா / விக்ஸித் பாரத் 2047 தொலைநோக்குக் கொள்கையின் கீழ் நிலையான நகர்ப்புற மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்காகப் புது தில்லியில் நடைபெற்றது.
- குப்பைக் கிடங்கு சீரமைப்புப் பணிகளுக்கான துரிதப்படுத்துதல் திட்டம் (DRAP) நகரத்தின் குப்பைகளைச் சுத்தம் செய்யத் தொடங்கியது.
- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் 8.8 கோடி மெட்ரிக் டன் அளவிலான பழைய கழிவுகளை அகற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- திறன் மேம்பாடு மற்றும் அறிவுப் பகிர்வுக்காக என்று தேசிய நகர்ப்புற விவகார நிறுவனத்தில் (NIUA) சுவச் பாரத் திட்டம் - அறிவு மேலாண்மை அலகு (KMU) அமைக்கப் பட்டது.
- கொள்கை மற்றும் தரவு முன்னெடுப்புகள் மூலம் மலிவு விலையிலான நகர்ப்புற வீட்டு வசதியை ஆதரிப்பதற்காக தேசிய நகர்ப்புற விவகார நிறுவனத்தில் (NIUA) வாழ்விட மற்றும் வீட்டு வசதி குறித்த பொதுக் கொள்கை மையம் நிறுவப்படும்.
- GIS அடிப்படையிலான கைபேசி செயலியான IIRS சங்கலன் செயலியை, விரைவான நகர்ப்புற ஆய்வுகளுக்காக இந்தியத் தொலைதூர உணர்திறன் நிறுவனம் (IIRS) அறிமுகப் படுத்தியது.
- நிலையான நகர்ப்புறத் திட்டங்களுக்கு தனியார் மற்றும் பலதரப்பு நிதியுதவியை ஈர்ப்பதற்காக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் (HUDCO) தலைமையிலான நகர்ப்புற முதலீட்டுச் சாளர அமைப்பு (UiWIN) அறிமுகப் படுத்தப் பட்டது.

- ❖ பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய மலை மற்றும் இமயமலை நகரங்களில் கழிவு மேலாண்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, சுவச் பாரத் திட்டம் - நகர்ப்புறம் 2.0 என்ற திட்டத்தின் கீழ் 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான மலை மற்றும் இமயமலை நகரங்களில் நிதி அறிமுகப்படுத்தப்பட்டது.

## உச்ச நீதிமன்றத்தின் புதிய வழிகாட்டுதல்கள்




- ❖ 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதி முதல், இனி அனைத்து புதிய வழக்குகளும் விசாரணைக்காக தானாகவே பட்டியலிடப்படும்.
- ❖ வழக்கு தொடுப்பவர்கள் தங்கள் வழக்குகளைப் பட்டியலிடுவதற்கு என்று குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.
- ❖ தனிநபர் சுதந்திரம் சம்பந்தப்பட்ட அவசர வழக்குகள் சரிபார்ப்புக்குப் பிறகு 2 வேலை நாட்களுக்குள் விசாரிக்கப்படும்.
- ❖ பிணை/ஜாமீன், முன்ஜாமீன், மரண தண்டனை, ஆட்கொணர்வு நீதிப்பேராணை, வெளியேற்றம் /உடைமை பறிமுதல் மற்றும் கட்டிட இடிப்பு வழக்குகளுக்கு என்று காலை 10:00 மணி முதல் காலை 10:30 மணி வரை அவசர கோரிக்கைகளை செய்யலாம்.
- ❖ மூத்த வழக்கறிஞர்கள் வாய்மொழியான குறிப்பிடல்களை மேற்கொள்ள முடியாது; அவசர காலங்களில் இளநிலை/ஜூனியர் வழக்கறிஞர்கள் அவ்வாறு செய்யலாம்.
- ❖ பழைய வழக்குகளுக்கான ஒத்தி வைப்புக் கடிதங்கள் பொதுவாக நிலுவையில் உள்ள வழக்குகளைக் குறைக்க அனுமதிக்கப் படுவதில்லை.

## சாணக்கியா பாதுகாப்புப் பேச்சுவார்த்தை 2025

- ❖ 2025 ஆம் ஆண்டு சாணக்கியா பாதுகாப்புப் பேச்சுவார்த்தை ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- ❖ இந்த நிகழ்வின் கருத்துரு: " Reform to Transform: Sashakt, Surakshit aur Viksit Bharat" (Empowered, Secure and Developed India) என்பதாகும்.
- ❖ பாதுகாப்பு துறையின் சீர்திருத்தங்கள், தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு, உள்நாட்டுமய மாக்கல் மற்றும் இந்தியாவிற்கான உத்தி சார் தன்னிறைவு பற்றி விவாதிப்பதே இதன்

நோக்கமாகும்.

- 2047 ஆம் ஆண்டிற்குள் இந்திய இராணுவத்தை நவீனமயமாக்குவதற்கான ஒரு செயல் திட்டத்தினை இந்தப் பேச்சுவார்த்தை அறிவித்தது.
- HOP 2032 ஆனது உடனடி மேம்பாடுகள் மற்றும் வழக்கமான அச்சுறுத்தல்களுக்குத் தயாராக இருப்பதில் கவனம் செலுத்துகிறது.
- STEP 2037 ஆனது செயற்கை நுண்ணறிவு, இணையவெளித் தாக்குதல் மற்றும் வலை அமைப்புச் செயல்பாடுகள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பத்தைச் சேர்க்கிறது.
- JUMP 2047 ஆனது முழு நவீனமயமாக்கல், பல துறை மேன்மை மற்றும் உத்தி சார் சுயாட்சியை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் கவனம் செலுத்தும் பகுதிகளில் பல-களப் போர் தயார்நிலை, செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையவெளித் திறன்கள், பொது-இராணுவ ஒத்துழைப்பு மற்றும் விரைவான பாதுகாப்பு கொள்முதல் ஆகியவை அடங்கும்.




## இந்திய மக்கள்தொகையில் பதிவான மாறுதல்




- இந்திய மக்கள்தொகை ஆய்வுச் சங்கத்தின் (IASP) படி, இந்தியாவின் மக்கள் தொகை 2080 ஆம் ஆண்டிற்குள் சுமார் 1.8 முதல் 1.9 பில்லியனாக நிலை பெறும் என்று

எதிர்பார்க்கப் படுகிறது.

- 2000 ஆம் ஆண்டில் 3.5 ஆக இருந்த மொத்தக் கருவுறுதல் விகிதம் (TFR) ஆனது 2025 ஆம் ஆண்டில் 1.9 ஆகக் குறைந்துள்ளது என்ற நிலையில் இது 2.1 என்ற மாற்றீடு அளவை விடக் குறைவாக உள்ளது.
- அதிக மேம்பாடு, சிறந்த கல்வி மற்றும் அதிகரித்தப் பெண் கல்வியறிவு ஆகியவை கருவுறுதல் விகிதத்தைக் குறைக்க உதவியுள்ளன.
- கேரளா மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் முறையே சுமார் 1.5 மற்றும் 1.3 என்ற TFR உடன் தற்போது மிகக் குறைந்த கருவுறுதல் நிலைகள் உள்ளன.
- ஆயுட்காலம் அதிகரித்து வருவதால், அதிக கவனிப்பு தேவைப்படும் முதியோர் மக்கள் தொகையானது இதனால் உருவாகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## ITPGRFA அமர்வு




- உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்களுக்கான சர்வதேச ஒப்பந்தத்தின் (ITPGRFA) நிர்வாகக் குழுவின் 11வது அமர்வு ஆனது பெருவின் லிமாவில் நிறைவடைந்தது.
- உலகின் தாவர அடிப்படையிலான உணவு முறையில் சுமார் 80 சதவீதத்தினைக் கொண்டுள்ள 35 முக்கிய உணவுப் பயிர்கள் மற்றும் 29 தீவனப் பயிர்களின் அணுகல் மற்றும் நன்மைப் பகிர்வை பல்தரப்பு அமைப்பு (MLS) நிர்வகிக்கிறது.
- தாவர மரபணுப் பொருட்களின் பரிமாற்றத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் வணிக நன்மைகளின் நியாயமான பகிர்வை உறுதி செய்வதற்கும் திருத்தப்பட்டத் தரநிலைப் பொருள் பரிமாற்ற ஒப்பந்தத்தை (SMTA) ஏற்றுக் கொள்வது குறித்து இந்த அமர்வு விவாதித்தது.
- 2001 ஆம் ஆண்டில் உணவு மற்றும் வேளாண் அமைப்பால் (FAO) ஏற்றுக் கொள்ளப் பட்ட ITPGRFA ஆனது 2004 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- இது பயிர்களின் மரபணு பன்முகத் தன்மைக்காக அர்ப்பணிக்கப்பட்ட முதல் சட்டப் பூர்வ சர்வதேச ஒப்பந்தமாகும் என்பதோடு, மேலும் இதில் 154 நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் உறுப்பினர்களாக உள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## துருக்கிய கிசிலெல்மா ஆளில்லா விமானம்




- துருக்கியின் கிசிலெல்மா ஆளில்லா விமானம் (UAV) ஆனது, காட்சிக்கு அப்பாற்பட்ட (BVR) தாக்குதல் வரம்பு கொண்ட எறிகணையைப் பயன்படுத்தி ஒரு விமானத்தைச் சுட்டு வீழ்த்திய உலகின் முதல் ஆளில்லா விமானமாக மாறியது.
- இந்தச் சோதனையின் போது, UAV ஆனது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட GÖKDOĞAN BVR எறிகணையை ஏவியது.
- கிசிலெல்மா ஆனது MURAD மின்னணு முறையில் ஆய்வு செய்யப்பட்ட தொகுப்பு (Active Electronically Scanned Array-AESA) ரேடாரைப் பயன்படுத்தி இலக்கைக் கண்டறிந்து கண்காணித்தது.
- இந்தச் செயல் விளக்கம் ஆனது, பணியாளர்கள் இல்லாத போர் விமானத்தினால் மேற் கொள்ளப் பட்டு சரி பார்க்கப்பட்ட முதல் மிகவும் நீண்ட தூர தாக்குதல் வரம்புடைய வான்வழிப் போர் ஆகும்.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## உண்ணக்கூடிய மற்றும் கூடு கட்டும் இந்திய உழவாரன் பறவை



- இந்திய உழவாரன் பறவை ஆனது (ஏரோட்ராமஸ் யூனிகலர்) சமீபத்தில் சென்னையில் உள்ள அடையாறு முகத்துவாரத்தில் தென்பட்டது.
- இது இலங்கை மற்றும் தென்மேற்கு இந்தியாவில், முக்கியமாக மகாராஷ்டிரா, கோவா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாட்டில் காணப்படுகிறது.
- இதன் IUCN வளங்காப்பு அந்தஸ்து தீவாய்ப்பு கவலை குறைந்த இனம் என்பதாகும்.


## தென்கிழக்கு ஆசியாவில் பருவமழையால் ஏற்பட்ட வெள்ளம்




- இந்தோனேசியா, இலங்கை, தாய்லாந்து மற்றும் மலேசியாவில் பெய்த கனமழையால் பரவலான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்பட்டு, குறைந்தது 1,100 பேர் உயிர் இழந்தனர்.
- சுமார் 600க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் மற்றும் நூற்றுக்கணக்கானோர் காணாமல் போனதாக அறிவிக்கப் பட்டதுடன், இந்தோனேசியா மிகவும் பாதிக்கப் பட்டதாக உள்ளது.
- பருவமழை என்பது இயற்கையான வானிலை நிகழ்வுகள் ஆகும் ஆனால் அவற்றின் விளைவுகள் பருவநிலை மாற்றத்தால் மோசமடையக் கூடும் என்பதோடு இது மழை மற்றும் புயல்களின் தீவிரத்தை அதிகரிக்கிறது.
- பருவமழை என்பது பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிக மழைப் பொழிவைக் கொண்டு வரும் பருவகால காற்று வடிவங்கள் ஆகும்.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், வெப்பமண்டல புயல்கள் பருவமழையுடன் இணைந்து இந்தோனேசியா, இலங்கை, தாய்லாந்து, மலேசியா மற்றும் வியட்நாமில் கடுமையான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளை ஏற்படுத்தின.
- பூமத்திய ரேகைக்கு சற்று வடக்கே மலாக்கா ஜலசந்தியில் உருவான சென்யார் புயல் இந்தப் பகுதியில் நிகழ்ந்த ஓர் அரிய நிகழ்வு ஆகும்.
- கோட்டோ புயல் என்பது வியட்நாமை அடைவதற்கு முன்பு பிலிப்பைன்ஸில் திடீர் வெள்ளத்தை ஏற்படுத்தியது என்ற நிலையில் டிட்வா புயல் இலங்கையைத் தாக்கியது.
- வெப்பமண்டலப் புயல்கள் பலத்தக் காற்று மற்றும் மழையுடன் கூடிய சக்திவாய்ந்த சுழலும் புயல்கள் ஆகும்; அவை கரீபியன்/வட அமெரிக்காவில் ஹரிக்கேன் என்றும், கிழக்கு ஆசியாவில் டைபூன்ஸ் என்றும், இந்தியப் பெருங்கடலில் புயல்கள் என்றும் அழைக்கப் படுகின்றன.

- மனிதனால் ஏற்படும் பருவநிலை மாற்றம் என்பது இந்தப் புயல்களை மேலும் தீவிரமாக்குவதோடு, அதிக மழைப்பொழிவையும் வலுவான சூறாவளிகளையும் புயல்களையும் உருவாக்குகிறது.

### வங்காள விரிகுடாவில் புயல்களின் தொடர்பு




- வங்காள விரிகுடாவில் (இந்தியப் பெருங்கடல்) இரண்டு சூறாவளிப் புயல்கள் உருவாகின்றன.
- அருகிலுள்ள இரண்டு புயல்கள் ஒரு பொதுவான மையத்தைச் சுற்றி சுழலும் போது ஃபுஜிவாரா விளைவு ஏற்படுகிறது.
- இரு புயல்கள் 1,400 கிலோமீட்டருக்குள் இருக்கும் போது மற்றும் ஒரே திசையில் (வடக்கு அரைக்கோளத்தில் எதிர்-கடிகார திசையில்) சுழலும் போது இது பெரும்பாலும் நிகழ்கிறது.
- புயல்களின் தொடர்பு ஆனது ஒன்றிணைய, தீவிரமடைய, மெதுவாக்க அல்லது பாதைகளை மாற்ற வழி வகுக்கும்.
- நீடித்த தொடர்பு தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ஒடிசா, மேற்கு வங்காளம், இலங்கை மற்றும் மியான்மரில் மழை மற்றும் வெள்ள அபாயத்தை அதிகரிக்கிறது.

## மாநிலச் செய்திகள்

### டாவோ மற்றும் யாக் சுர்பி

- அருணாச்சலப் பிரதேசத்தின் பாரம்பரிய கத்தி டாவோ மற்றும் ஹைலேண்ட் சீஸ் யாக் சுர்பி 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புவி சார் குறியீட்டினை (GI) பெற்றன.
- டாவோ பழங்குடியினக் கைவினைஞர்களால் பாரம்பரியத் தயாரிப்பு முறைகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகிறது என்பதோடு மேலும் இது கலாச்சார அடையாளம் மற்றும் கைவினைத் திறனைக் குறிக்கிறது.

- பிரதானமாக மேற்கு காமெங் மற்றும் தவாங் மாவட்டங்களில், மிகவும் அடர்த்தியான அமைப்பு, அதிக ஊட்டச்சத்து மற்றும் நீண்ட நாள் கெடாமல் தாங்கும் தன்மை கொண்ட யாக் சுர்பி என்பது பழங்குடியின அருணாச்சல யாக் பாலில் இருந்து தயாரிக்கப் படும் ஒரு பால் சார்ந்தப் பொருள் ஆகும்.
- அருணாச்சலப் பிரதேசத்தில் இதுவரை சுமார் 20 புவி சார் குறியீடு பெற்ற பொருட்கள் உள்ளன என்பதோடு மேலும் 2030 ஆம் ஆண்டிற்குள் 50 என்ற எண்ணிக்கையை எட்ட அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2025 ஆம் ஆண்டிற்கான கம்லா பாசின் விருது




- சென்னையைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநரான மோகனா சுந்தரி என்பவர் பாலினச் சமத்துவத்தை ஊக்குவித்ததற்காக 2025 ஆம் ஆண்டிற்கான கம்லா பாசின் விருதை (தெற்காசியா) பெற்றார்.

- தமிழ்நாட்டிலிருந்து மிக முதல் முறையாக இந்த விருதைப் பெற்றவர் இவரே ஆவார் என்பதோடு நேபாளத்தின் காத்மாண்டுவில் அவர் இந்த விருதைப் பெற்றார்.
- இந்த விருதை ஆசாத் அறக்கட்டளை, இந்தியத் தேசிய அறக்கட்டளை மற்றும் ஐபார்ட்னர் இந்தியா ஆகியவை நிறுவியுள்ளன.
- மோகனா 600க்கும் மேற்பட்ட பெண் ஆட்டோ ஓட்டுநர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவு நிறுவனமான வீரப் பெண்கள் முன்னேற்ற சங்கத்தின் (VPMS) தலைவராக உள்ளார்.
- VPMS ஆனது, நிதி நிலைத்தன்மை, அவசர நிதி மற்றும் ESI (ஊழியர்களின் மாநிலக் காப்பீடு) மற்றும் PF (வருவாய் நிதி) போன்ற திட்டங்களுக்கான அணுகலுடன் பெண் ஓட்டுநர்களை ஆதரிக்கிறது.

### WorldSkills Asia போட்டி 2025

- இந்தியா முதல் முறையாக 2025 ஆம் ஆண்டு WorldSkills Asia போட்டியில் (WSAC) பங்கேற்றது.
- இந்தப் போட்டி ஆசியா முழுவதும் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியில் (TVET) சிறந்து விளங்கும் நிலையை ஊக்குவிக்கிறது.
- சீனாவின் தைபேயில் நடைபெற்ற WSAC 2025 போட்டியில், ரோபாட்டிக்ஸ், வலை தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறை வடிவமைப்பு போன்ற 44 திறன்களில் போட்டி நடைபெற்றது.
- இதில் பங்கேற்ற 29 நாடுகளில் இந்தியா ஒட்டு மொத்தமாக 8வது இடத்தைப் பிடித்தது.
- இந்தியா 1 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்கள் மற்றும் சிறந்து விளங்குவதற்கான 3 பதக்கங்களை வென்றது.




## முக்கிய தினங்கள்

### 2025 ஆம் ஆண்டு நாகாலாந்து மாநில தினம் - டிசம்பர் 01

- நாகாலாந்து மாநிலச் சட்டம் (1962) இயற்றப்பட்ட பிறகு, 1963 ஆம் ஆண்டு டிசம்பர் 01

ஆம் தேதியன்று நாகாலாந்து இந்தியாவின் 16வது மாநிலமாக மாறியது.

- வடகிழக்கு இந்தியாவில் அமைந்துள்ள இது அருணாச்சலப் பிரதேசம், அசாம், மணிப்பூர் மற்றும் மியான்மர் ஆகியவற்றினை எல்லைகளாகக் கொண்டுள்ளது.
- நாகாலாந்தின் தலைநகரம் கோஹிமா ஆகும்.
- நாகாலாந்தில் கொன்யாக், ஏஓ, சேமா மற்றும் அங்காமி உள்ளிட்ட 16 முக்கியப் பழங்குடியினர் உள்ளனர்.




## உலக AIDS தினம் 2025 - டிசம்பர் 01




- எச்ஐவி (மனித நோயெதிர்ப்பு குறைபாடு வைரஸ்) என்பது உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தை, குறிப்பாக தொற்றுகளை எதிர்த்துப் போராட உதவும் CD4 செல்களைத் தாக்கும் ஒரு வைரஸ் ஆகும்.
- இந்த நாள் முதன்முதலில் 1988 ஆம் ஆண்டில் உலகின் முதல் உலகளாவிய சுகாதாரத் தினமாகக் கொண்டாடப்பட்டது.

- தடுப்பு, பரிசோதனை, சிகிச்சை மற்றும் எச்ஐவி பாதிப்புடன் வாழும் மக்களை ஆதரிப்பதே இதன் நோக்கமாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Overcoming disruption, transforming the AIDS response" என்பதாகும்.
- 2024 ஆம் ஆண்டில், சுமார் 40.8 மில்லியன் மக்கள் எச்ஐவி பாதிப்புடனும் மேலும் 1.3 மில்லியன் பேர் தொடர்பினால் ஏற்பட்ட எச்ஐவி பாதிப்புடனும் வாழ்ந்து வந்தனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★